**SC.NO. 94/2023** **Date: 12.03.2026**

கூடுதல் மாவட்ட நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் ), காஞ்சிபுரம் (பக்கம் ) சாட்சியாகிய திரு. கிரிராஜ் என்ற **Pw6** நபரின் வாக்குமூலம் (**1876ம்** ஆண்டின் **10** விதியின்) **Tr.A.Pachaiyappan, Junior Assistant**, அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

பெயர் – திரு. கிரிராஜ்
த/பெ – ராஜா
வயது – 23/2026
தொழில் – மேற்பார்வையாளர், தனியார் கம்பெனி

**முதல் விசாரணை**

நான் தற்போது காஞ்சிபுரம் வட்டம், நீர்வள்ளூர் கிராமம், பஜனை கோவில் தெருவில் வசித்து வருகிறேன். தனியார் கம்பெனியில் மேற்பார்வையாளராக பணிபுரிகிறேன். 2023ம் வருடத்தில் ஒரு நாள் எங்கள் ஊரை சேர்ந்த கோவிந்தன் தாத்தாவை நகை பணத்திற்காக அவருடைய சொந்தக்காரரே தாமல் கிராமத்தை சேர்ந்தவர் கொலை செய்துவிட்டதாக சொன்னார்கள். போலீசார் இறந்த நபரின் பிரேத விசாரணைக்காக என்னை காவல்நிலையத்திற்கு அழைத்தார்கள். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

இந்த வழக்கின் புகார்தாரர் கிருஸ்ணன் ஆவார். அவர் புகாரில் ரூ–36980/– திருடு போனதாக குறிப்பிட்ட விவரத்தை எனக்கு தெரியுமா என்றால் நகை பணம் திருடு போன விவரம் எனக்கு தெரியும்.. எவ்வளவு பணம் என்று தெரியாது. போலீசார் என்னை

விசாரிக்கும்போது எவ்வளவு பணம் என்ற விவரத்தை சொல்லவில்லை என்றால் சரிதான். எனக்கு வழக்கு பற்றி தெரியாது என்றும் போலீசார் கேட்டு கொண்டதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை =** இல்லை

**SC.NO. 94/2023** **Date: 12.03.2026**

கூடுதல் மாவட்ட நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் ), காஞ்சிபுரம் (பக்கம் ) சாட்சியாகிய திரு. சரவணன் என்ற **Pw5** நபரின் வாக்குமூலம் (**1876ம்** ஆண்டின் **10** விதியின்) **Tr.A.Pachaiyappan, Junior Assistant**, அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

பெயர் – திரு. சரவணன்
த/பெ – பார்த்தசாரதி
வயது – 38/2026
தொழில் – முடிதிருத்தம்

**முதல் விசாரணை**

நான் தற்போது காஞ்சிபுரம் வட்டம் நீர்வள்ளுர் கிராமம் பஜனை கோவில் தெரு க.எண்.279ல் வசித்து வருகிறேன். நான் முடி திருத்தம் வேலை செய்து வருகிறேன். 2023ம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஒரு நாள் காலை 7 மணிக்கு நான் முடிவெட்டு பணிக்காக கடையை திறந்தபோது ஒரு சிலர் அங்கு வந்தார்கள். அப்போது முடி திருத்த வந்த சுரேஸ் என்பவர் வந்தார் .அப்போது கோவிந்தன் தாத்தாவை நகை எல்லாம் திருடி கொண்டு கொலை செய்துவிட்டதாக பேசிக்கொண்டார்கள். அதனால் நானும் சுரேஸ்ம் இறந்துபோன கோவிந்தன் தாத்தாவை பாரக்க சென்றோம். அப்போது காஞ்சி தாலுகா போலீஸ் சம்பவ இடத்தில் மோப்ப நாயை வைத்து கொண்டும், கைரேகை ஆட்கள் நின்றுகொண்டிருந்தார்கள். சம்பவ இடத்தில் வரைபடம் தயாரித்து கொண்டிருந்தார்கள். அதை அரை மணி நேரம் கழித்து எடுத்து வந்து படித்து பார்த்து கையெழுத்து போட சொன்னார்கள். அதில் நானும் சுரேஸ்ம் கையெழுத்து போட்டோம். தற்போது என்னிடம் காட்டப்படும்

பார்வை மகசரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது தான். அந்த பார்வை மகசர் அ.த.சா.ஆ.2 ஆகும். அந்த வீட்டின் அருகில் ஒரு சரக்கு பாட்டிலை எடுத்தார்கள். 7.4.2023 தேதி காலை 8 மணிக்கு கைப்பற்றிய கைப்பற்று மகசரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது தான். அந்த கைப்பற்று மகசர் அ.த.சா.ஆ.3 ஆகும். அதே தேதி காலை 8.30 மணிக்கு மற்றொரு கைப்பற்று மகசரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது தான். அந்த கைப்பற்று மகசர் அ.த.சா.ஆ.4 ஆகும். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் என்ன படித்துள்ளேன் என்றால் 10ம் வகுப்பு படித்துள்ளேன். முடித்திருத்தம் கடை எனக்கு சொந்தமானது ஆகும். காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்யும் போது கோவிந்தன் என்னுடைய உறவினர் என்று வாக்குமூலம் கொடுத்துள்ளேன் என்றால் அது தவறு தான். சம்பவம் நடந்த நாள் தெரியுமா என்றால் தெரியாது. ஆனால் வருடம் 2023 ஏப்ரல் மாதம் ஆகும். சம்பவம் நடந்த கிழமை தெரியுமா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. போலீஸ் விசாரணையில் நான் எனக்கு தகவல் சுரேஸ் மூலமாக தான் தெரிந்தது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நீர்வள்ளூர் கிராமத்தில் கடந்த 10 வருடமாக முடிதிருத்தம் கடையை வைத்துள்ளேன். நீர்வள்ளூர் கிராமத்தில் யாராவது இறந்துவிட்டால் இறுதி சடங்கு பணி செய்ய

என்னை அழைப்பார்களா என்றால் அழைப்பார்கள். பொதுவாக யாருக்காவது இறப்பு ஏற்பட்டால் அன்றைய தினமே எனக்கு தகவல் சொல்வார்களா என்றால் சொல்வார்கள். இறப்பு இரவு நடந்தால் மறுநாள் காலையில் தான் சொல்வார்கள். இந்த வழக்கில் கைப்பற்றப்பட்ட காலி பாட்டில் பெயர் சொல்லமுடியுமா என்றால் கிங் லுயிஸ் போல ஆங்கிலத்தில் வரும். காலி பாட்டில் எடுத்ததால் காலி பாட்டில் என்று போலீசார் விசாரணையில் சொன்னேன். அப்போது அதில் பிராந்தியோ அல்லது வேறு எதாவது திரவமோ இல்லை என்று சொன்னால் சரிதான். அந்த பாட்டிலில் ஸ்டிக்கர் ஒட்டி இருந்ததா இல்லையா என்றால் கவனிக்கவில்லை. அந்த காலி பாட்டிலை மட்டும் தான் போலீசார் கைப்பற்றினார்கள் என்றால் சரிதான். போலீசார் என்னை விசாரணை செய்யும் போது என்ன என்ன பொருட்கள் கொண்டு வந்தார்கள் என்றால் என்ன கொண்டு வந்தார்கள் என்று நான் கவனிக்கவில்லை. கணிணி மற்றும் பிரிண்டர் ஏதேனும் கொண்டு வந்தார்களா என்றால் இல்லை. சம்பவ இடத்தில் இருந்து எங்கு பிரிண்ட் எடுத்தார்கள் என்ற விவரம் உங்களுக்கு தெரியுலா என்றால் சம்பவ இடத்தில் இருந்து சுமார் 2 கி.மீ தொலைவில் பிள்ளை சத்திரம் நெட்சென்டர்க்கு சென்று அரை மணி நேரம் கழித்து பிரிண்ட் அவுட் எடுத்து வந்து என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். இவை அனைத்தும் முடித்து எப்போது கையெழுத்து என்னிடம் வாங்கினார்கள் என்றால் மணி சுமார் இரவு 8

மணி போல் இருக்கும். போலீசார் என்னை விசாரணை செய்யும் போது சம்பவ இடத்தில் இல்லை என்றாலும் காவல் நிலையத்தில் தான் வைத்து என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள் என்றாலும் சரியல்ல. சம்பவ இடத்தில் தான் கையெழுத்து வாங்கினார்கள். புகார்தாரர் கேட்டுகொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை = இல்லை

**SC.NO. 94/2023** **Date: 12.03.2026**

கூடுதல் மாவட்ட நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் ), காஞ்சிபுரம் (பக்கம் ) சாட்சியாகிய திரு. சதீஷ் என்ற **Pw4** நபரின் வாக்குமூலம் (**1876ம்** ஆண்டின் **10** விதியின்) **Tr.A.Pachaiyappan, Junior Assistant**, அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

பெயர் – திரு. சதீஷ்
த/பெ – தணிகைவேலு
வயது – 34/2026
தொழில் – தனியார் நிறுவனத்தில் வேலை

**முதல் விசாரணை**

நான் தற்போது காஞ்சிபுரம் வட்டம் நீர்வள்ளுர் கிராமம் பஜனை கோவில் தெரு கதவு 42/3 என்ற முகவரியில் வசித்து வருகிறேன் நான் தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கு சம்மந்தமாக ஆஜர் எதிரி எனக்கு தெரியும். இந்த வழக்க சம்மந்தமாக எனக்கு 2023ஆம் வருடத்தில் ஒரு நாள் ஏப்ரல் மாதம் முதல் வராத்தில் எங்கள் வீட்டிலிருந்து எங்கள் ஊரில் உள்ள சுண்ணாம்பு குட்டை தெருவுக்கு நடை பயிற்சிக்கு சென்றேன். அப்போது சுமார் மாலை 06.00 மணிக்கு திரும்பிவரும்போது எனது மாமா கிருஷ்ணனை பார்த்து பேசி கொண்டிருந்தேன் அப்போது எதிரி பாஷா கிருஷ்ணன் வீட்டிலிருந்து வெளியே வேகமாக வந்தார். அவரை பார்த்து எனது மாமா எங்கடா போயிருந்த இத்தனை நாள் என்று கேடட்ார். அதற்கு பாஸா தாத்தாவை பார்த்துவிட்டு செல்கிறேன் என்று சொல்லிவிட்டு சென்றுவிட்டார். மாமா கிருஸ்ணன் அவர்கள் உள்ளே சென்றார். நான் எதிரில் வந்த

என்னுடைய நண்பரிடம்பேசிக்கொண்டிருந்தேன். மாமா கிருஸ்ணனுடைய ஓட்டு வீட்டில் இருந்து அவர் அலறல் சத்தம் கேட்டது. நான் என்ன சத்தம் என்று கேட்டு அந்த வீட்டிற்கு சென்றேன். அங்கு அவருடைய அப்பா கோவிந்தராஜ் கீழே கிடந்தார். கிருஸ்ணன் அவர்கள் அவரை தட்டி பார்த்தார். ஆனால் அவர் எழுந்திருக்கவில்லை. உடனே அ'ங்கிருந்த சாவியை எடுத்து கொண்டு வா போகலாம் என்று என்னை கூப்பிட்டு கொண்டு பக்கத்தில் இருந்த அவர்கள் மாடி வீட்டிற்கு சென்றார். மாடி வீட்டு கதவை சாவி போட்டு திறந்து கொண்டு உள்ளே சென்றார். அங்கு உள்ளே இருந்த பெட்ரூமில் இருந்த பூட்டு உடைக்கப்பட்டிருந்தது. என்னடா பூட்டு உடைந்துஇருக்கிறது என்று எண்ணி அந்த ரூமில் சென்று பீரோவை சென்று பார்த்தார். அந்த பீரோ உடைந்திருந்தது. அந்த பீரோவில் இருந்த பணம் நகைகள் காணாமல் போய்விட்டதாக சொன்னார். அப்போது தான் ஆஜர் எதிரி தன்னிடம் ஒரு வாரத்திற்கு முன்னதாக பணம் கேட்டதாக சொன்னார். ஆஜர் எதிரி தான் நகை மற்றும் பணத்தை எடுத்து இருப்பானோ என்றும் என் அப்பாவை எதாவது செய்துவிட்டு சென்று இருப்பானோ என்று வெளியே வந்து ஆஜர் எதிரி தேடி பார்த்தார். ஆனால் அவர் அங்கு காணவில்லை. அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் அங்கு வந்தார்கள். என்ன ஆனது என்று விசாரித்தார்கள். கூடவே அவருடைய பெண்கள் இருந்தார்கள். பக்கத்து வீட்டு அக்கா குமாரியும் அங்கு இருந்தார். கோவிந்தராஜ் இறந்துவிட்டு இருந்தார். அக்கம்

பக்கத்தில் இருப்பவரிடம் பேசி கேஸ் கொடுக்கலாம் என்று பேசி இருந்தோம். இரவு 10 மணிக்கு போலீசார் வந்தார்கள். பிரேதத்தை கைப்பற்றி விசாரணை செய்தார்க்ள. அதன் பிறக என்னுடைய மாமா காவல்நிலையத்தில் புகார் கொடுக்க என்னை அழைத்தார். மறுநாள் காலை சென்று காஞ்சிபுரம் தாலுகா காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார். இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் வேலை செய்யும் தனியார் கம்பெனியின் பெயர் ஐ.டெக் இன்டஸ்ரிஸ் ஆகும். அந்த கம்பெனி சுங்குவார்சத்திரம் பக்கத்தில் பன்னூர் கிராமத்தில் உள்ளது. 2022ல் இருந்து 2023 டிசம்பர் வரை வேலை செய்தேன். சம்பவம் நடந்ததாக சொல்லப்படம் நேரத்தில் எப்போது வேலைக்கு செல்வேன் என்றால் காலை 7 மணிக்கு சென்று மாலை 3 மணிக்கு வீடு திரும்புவேன். நான் என்னுடைய முதல் விசாரணையில் நடைபயிற்சிக்கு சென்றதாக கூறப்படும் விவரத்தை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் நடைபயிற்சிக்கு போன விவரத்தை சொல்லவில்லை. சம்பவம் நடந்த தேதியை என்னால் குறிபபிட்டு கூறமுடியாது என்றால் சம்பவம் நடந்தது முதல் வாரம் என்று மட்டும் என்னால் கூறமுடியும். தேதி குறித்து எனக்கு ஞாபகம் இல்லை.

கோவிந்தராஜ் இறந்த விவரத்தை முதலில் யார் எனக்கு கூறினார் என்றால் இறந்த கோவிந்தராஜின் மகன் கிருஸ்ணன் கோவிந்தராஜினை தட்டி தட்டி பார்த்துவிட்டு இறந்து இருப்பாரோ என்று சந்தேகத்துடன் கூறினார். மாலை 5.30 மணிக்கு யார் அங்கு இருந்தார்கள் என்றால் அப்போது நானே அங்கு இல்லை. பொதுவாக நான் நடைபயிற்சிக்கு எவ்வளவு நேரம் செல்வேன் என்றால் நேரம் என்னால் குறிப்பிட்டு சொல்லமுடியாது. 20 மற்றும் 30 நிமிடம் செல்வேன். சுண்ணாம்பு குட்டை தெருவை தாண்டி ஒரு கிரவுண்ட் இருக்கும் அதை தாண்டி செல்வேன்.சம்பவத்தன்று மாலை 6 மணிக்கு எதிரி என்ன நிற உடைகளை அணிந்திருந்தார் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. சம்பவத்தன்று எதிரி அவர் கைகளில் எந்த வித ஆயுதமோ, நகைகளோ வைத்திருக்கவில்லை என்றால் நான் பார்க்கவில்லை. கோவிந்தராஜ் இறந்துவிட்டார் என்ற விவரத்தை அவரது மகன் கிருஸ்ணன் எனக்கு பிறகு யாருக்கு சொன்னார் என்றால் அக்கம் பக்கத்தினரிடம் கூறினார். சம்பவத்தை பற்றி காவல்நிலையத்திற்கு கிருஸ்ணன் என்பவர் தொலைபேசி மூலமாகவோ அல்லது வேறு வகையிலோ தொடர்பு கொண்ட விவரத்தை தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 1 மணி நேரம் இருந்துவிட்டு நான் சென்றுவிட்டேன். திருடு போன பணம் எவ்வளவு தொகை என்று எனக்கு தெரியுமா என்று கேட்டால் தெரியாது. நான் தனியார் நிறுவனத்தில் வேலை செய்வதை உறுதி செய்ய ஆவணம் எதேனும்

போலீசார் என்னை விசாரிக்கும் போது தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. இறந்த கோவிந்தராஜ் என்பவரின் உடலை வைப்பதற்கு குளிர்சாதன பெட்டி கொண்டு வரப்பட்டதா என்றால் நான் அங்கு இருந்தவரை கொண்டு வரப்படவில்லை. நான் இருந்த 1 மணி நேரம் தவிர அதற்கு அடுத்தபடியான நேரத்தில் அங்கு என்ன நடந்தது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். என்னுடைய மாமாவான கிருஸ்ணனின் தகப்பனார் இறந்த தகவல் தெரிந்தும் 1 மணி நேரம் கழித்து நான் எங்கு சென்றுவிட்டேன் என்றால் நான் வீட்டிற்கு சென்றுவிட்டேன். நான் இருந்த 1 மணி நேரத்தில் சொந்தகாரர்கள் மற்றும் அனைவரும் பூ மாலை கொண்டு வந்து போட்டார்களா என்றால் ஞாபகம் இல்லை. கிருஸ்ணனின் தகப்பனார் இறந்ததற்கு நான் இருந்த 1 மணி நேரத்தில் இறுதி சடங்கு ஆரம்பித்து இருந்தார்களா என்றால் இல்லை. அந்த 1 மணி நேரத்தில் தோராயமாக எத்தனை நபர்கள் வந்தார்கள் என்றால் 20 நபர்கள் வந்தார்கள். நான் என்ன படித்துள்ளேன் என்றால் எம்.பி.ஏ. படித்துள்ளேன். நான் தனியார் நிறுவனத்தில் வேலை செய்ததிற்கான சம்பள ரசீதை போலீசாரிடம் கொடுத்தேனா என்றால் இல்லை. சம்பவம் நடந்த நாள் அன்று நான் எதிரியை பார்க்கவில்லை என்றாலும் நான் தனியார் கம்பெனியில் வேலை செய்யவில்லை

என்றாலும் நான் புகார்தாரருக்கு உதவியாக கட்டிட பணி உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன் என்றாலும் அதனால் புகார்தாரருக்கு சாதகமாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

மறு விசாரணை – இல்லை